செ.கு.எண் : 168 நாள் : 03-05-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 3.5.2012

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் கிராமம், நாகூர் தர்காவில் 2.5.2012 அன்று நடைபெற்ற சந்தனகூடு திருவிழாவின் போது, சந்தனகூடு ஊர்வலத்தில் சென்ற மின் அலங்கார வாகனத்தில் அமர்ந்திருந்த திரு. மொய்தீன் அப்துல் காதர் என்பவரின் மகன் திரு. தமிமுல் அன்சாரி மற்றும் வாகனத்தை இழுத்துச் சென்ற திரு. அன்வர் பாட்சா என்பவரின் மகன் திரு. சபீர் என்கிற அப்துல் ஹமீது ஆகிய இருவரும் மின்சாரம் தாக்கி பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த தமிமுல் அன்சாரி மற்றும் சபீர் என்கிற அப்துல் ஹமீது ஆகிய இருவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர் என்பதையும் அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், நாகப்பட்டினம் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவத்தில் காலமான தமிமுல் அன்சாரி மற்றும் சபீர் என்கிற அப்துல் ஹமீது ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9